A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 12 / 2023**

திருமதி இரா. ரேவதி,
4/150, தெற்கு தெரு, பெரியப்பட்டி,
நாமக்கல் – 637 002.

………மேல்முறையீட்டாளர்
(திரு P. செல்வராஜ்)

எதிர்

1. மேற்பார்வை பொறியாளர்,
நாமக்கல் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
ஜெய் சூர்யா டிபார்ட்மெண்டல் ஸ்டோர்ஸ் எதிரில்,
திருச்செங்கோடு ரோடு, நாமக்கல் – 637 001.

2. செயற்பொறியாளர்/இ&ப/ நாமக்கல்,
நாமக்கல் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
38/A, கோ–ஆப்ரேட்டிவ் காலனி,
நாமக்கல் – 637 001.

3. உதவி மின்பொறியாளர்/இ&ப/கிராமபுறம்/மேற்கு/நாமக்கல்,
நாமக்கல் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
6வது வார்டு, D.No. 751, 110 KVSS வளாகம்,
நாமக்கல் – 637 001.

. . . எதிர்மனுதாரர்கள்
(திரு S. நாகராஜன், செயற்பொறியாளர்/இ&ப/ நாமக்கல்
திரு S. கார்த்திக், உதவி மின்பொறியாளர்/இ&ப/கிராமபுறம்/மேற்கு/நாமக்கல்)

**மனு பெறப்பட்ட நாள்: 01–02–2023**

**கேட்புரை நாள்: 20–04–2023**

**ஆணை நாள்: 28–04–2023**

01.02.2023 அன்று பெறப்பட்ட திருமதி இரா . ரேவதி, 4/150, தெற்கு தெரு , பெரியப்பட்டி, நாமக்கல் – 637 002 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 12/2023 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது . மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 20.04.2023 அன்று நடைபெற்றது . மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

## 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை

சர்வே எண் 374/4–இல் உள்ள திறந்தவெளி கிணற்றுக்கு 7.5 HP மின்பளுவுக்கு விவசாய மின் இணைப்பு வேண்டி மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

## 2.0 வழக்கின் சுருக்கம்:

2.1 மேல்முறையீட்டாளர் திருமதி.ரேவதி சர்வே எண் .374/4–ல் உள்ள கிணற்றிற்கு விவசாய மின் இணைப்பு வேண்டி டிசம்பர் 2021–இல் விண்ணப்பித்ததற்கு இன்று வரை மின் இணைப்பு வழங்கப்படவில்லை என மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 2022–2023 ஆம் ஆண்டிற்கான விவசாய மின் இணைப்பு வழங்கும் குறியீடு, வரையறை செய்யப்பட்டு 31.03.2022–க்குள் தயார்நிலை பதிவு செய்துள்ள நபர்களுக்கு மட்டும் மின் இணைப்பு வழங்க உத்தரவு பெறப்பட்டதால் திருமதி.இரா.ரேவதி அவர்களின் 22.06.2022 தேதிய தயார் நிலைப்பதிவிற்கு மின் இணைப்பு வழங்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 எனவே, விவசாய மின் இணைப்பு வேண்டி மேல்முறையீட்டாளர் நாமக்கல் மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை 29.11.2022 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் , நாமக்கல் மின்பகிர்மான வட்டம் 29.12.2022 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

**3.0 <u>மன்றத்தின் தீர்வு :</u>**

3.1 நாமக்கல் மின்பகிர்மான வட்டம் , மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 29.12.2022 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது . அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"மன்றத்தின் தீர்வு:*

*திருமதி ரேவதி, க/பெ செல்வராஜ் அவர்கள் விவசாய மின் இணைப்பு பெற தயார் நிலை பதிவு செய்ய காலதாமதம் ஏற்பட்டதற்கு பிரிவு அலுவலரே காரணம் என்பதும் விசாரணையின் அடிப்படையில் தெரிய வந்து உள்ளது. நாமக்கல் கோட்டம் புறநகர்/மேற்கு/நாமக்கல் பிரிவில் திருமதி.ரேவதி க/பெ செல்வராஜ் அவர்கள் நிலுவையாக உள்ள சாதாரண முன் வரிசை தயார் நிலைப்பதிவில் முதல் நபராக உள்ளதும் மற்றும் தயார் நிலைப்பதிவு நாள் 22.06.2022 ஆகவும் தெரியவருகிறது.*

*எனவே உரிய அலுவலர் மீது தகுந்த ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள செயற்பொறியாளர்/இப/நாமக்கல் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார். மேலும் தலைமையகத்துக்கு சிறப்பு அனுமதி கோரி சமர்பிக்கப்பட்டுள்ள கருத்துருவுக்கு ஒப்புதல் பெற்று உடனடியாக மின் இணைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற தீர்வுடன் இம்மனு முடித்து வைக்கப்படுகிறது."*

**4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>**

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 20.04.2023 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் சார்பாக திரு P. செல்வராஜ் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு S. நாகராஜன், செயற்பொறியாளர்/இ&ப/ நாமக்கல் மற்றும் திரு S. கார்த்திக், உதவி மின்பொறியாளர் /இ&ப/கிராமபுறம்/மேற்கு/நாமக்கல், நாமக்கல் மின் பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது . குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள் , குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம் பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்:</u>

5.1 நாமக்கல் கிராம மேற்கு அலுவலகத்தில் விவசாய மின் இணைப்பு வேண்டி 2011 ஆம் ஆண்டு வரிசை எண் 259 பதிவிற்கு ஒரு லட்சம் மின் இணைப்பு திட்டத்தின் கீழ் டிசம்பர் 2021 இல் பெறப்பட்ட அறிவிப்பிற்கு ஜனவரி 2022–இல் அனைத்து ஆவணங்கள் அளிக்கப்பட்டும் ஜூன் மாதம் வரை நடவடிக்கை மேற்கொள்ளாமல், ஜூன் மாதத்தில் அரை ஏக்கர் நிலம் இல்லை என எதிர்மனுதாரர் கூறியதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 ஆனால் போதுமான நிலம் இருந்தும் கள ஆய்வு மேற்கொள்ளாமல் கால தாமதமாக பதிவு செய்துவிட்டு இந்நாள் வரை இணைப்பு வழங்கவில்லை எனவும், செயற்பொறியாளர் மற்றும் மேற்பார்வை பொறியாளர் ஆகியோரிடம் முறையிட்டதன் பெயரில் மின் கம்பம் நட்டு வயர் இணைப்பு செய்து விட்டு மின் இணைப்பு வழங்காமல் காலம் தாழ்த்துவதாகவும், எனவே, மின் இணைப்பு வழங்க வேண்டியும் மற்றும் இழப்பீடு வழங்க வேண்டியும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

## 6.0 எதிர்மனுதாரரின் வாதங்கள்

6.1 நாமக்கல் மின்பகிர்மான வட்டம் – நாமக்கல் கோட்டம் – பெரியப்பட்டி கிராமத்தில் சர்வே எண் 374/4 – இல் உள்ள திறந்த வெளி கிணற்றுக்கு 7.5 Hp மின்பளுவுக்கு விவசாய மின் இணைப்பு வேண்டி திருமதி.இரா.ரேவதி அவர்கள் விண்ணப்பம் செய்தமை 12.12.2011 அன்று பதிவு எண். செ.பொ.நா/வி259/11–12 இன்படி பதிவு செய்யப்பட்டதாகவும், இந்த விண்ணப்பத்திற்கு சாதாரண முன்வரிசையில் மின் இணைப்பு பெற்றுக்கொள்ள தயார் நிலையினை பதிவு செய்து கொள்ள திருமதி.இரா.ரேவதி அவர்களுக்கு 31.12.2021 அன்று 30 நாள் அவகாச அறிவிப்பு கடிதம் செயற்பொறியாளர்/இ&ப/நாமக்கல் அவர்களால் வழங்கப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 அதன் பின் 15.6.2022 அன்று திருமதி.இரா.ரேவதி அவர்களின் மகன் திரு.கோகுல்நாத் என்பவர் விண்ணப்ப பதிவு எண்.259/2010–11ற்கு செயற் பொறியாளர்/இ&ப/நாமக்கல் அவர்களது கடித எண்.234/2021 Dt.31.03.2021–ற்கு கடந்த 6 மாத காலமாக நடவடிக்கை இல்லாமல் உள்ளது எனவும், வேண்டுமென்றே தாமதப்படுத்துவதாகவும் புகார் அளித்துள்ளதாக (Petition no . 150622642533) எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 14.06.2022 தேதியில் திருமதி.இரா.ரேவதி அவர்கள் தயார் நிலை பதிவு செய்வதற்கு விண்ணப்பம் அளிக்கப்பட்ட போது கூட்டாக பாத்தியப்பட்ட நிலம் குறைவாக இருந்தாலும் கிணற்றை ஒட்டி 374/1, 373ல் 1a, 1b, 1c மற்றும் 378/4, 5 ஆக இதில் மொத்தம் 2.5 ஏக்கர் நிலம் பாசனத்திக்கு உரியது என தெரிவித்து 6 மாதகாலம் அவகாசம் தயார் நிலை பதிவு செய்திட வேண்டி உதவிப் பொறியாளரிடம் விண்ணப்பம் கொடுத்துள்ளதாகவும், இக்கடிதத்தில் 20.06.2022 தேதியில் உதவி பொறியாளர் /இ&ப/புறநகர்–மேற்கு/நாமக்கல் அவர்களால் சுருக்கொப்பம் செய்யப்பட்டுள்ளதாகவும், மேலும் 20.06.2022 தேதியில் திருமதி.இரா.ரேவதி அவர்கள் தயார் நிலைபதிவு செய்து கொள்ள மேற்கொண்டு 6 மாத காலம் அவகாசம் கோரியுள்ளார் என தெரிவித்து உ.செ.பொ/இ&ப/வளையப்பட்டி அவர்கட்கு உதவிபொறியாளர்/ இ&ப/கிராமம்/ மேற்கு/நாமக்கல் அவர்கள் கடிதம் அனுப்பி உள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 21.06.2022 தேதியில் உதவி செயற்பொறியாளரிடமிருந்து செயற் பொறியாளர்/ நாமக்கல் அவர்களுக்கு 6 மாத காலம் காலநீட்டிப்பு அவகாசத்திற்கு (தயார் நிலைப்பதிவு செய்திட) அனுமதி கோரப்பட்டுள்ளதாகவும், அதன் பேரில் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள 30 நாள் அறிவிப்பு கடிதம் பெறப்பட்ட தேதியில் இருந்து காலநீட்டிப்பு 05.07.2022 முடிய (ஆறு மாத காலத்திற்கு) அனுமதி செயற்பொறியாளர்/இ&ப/நாமக்கல் அவர்களால் 22.06.2022 தேதியில் வழங்கப்பட்டு திருமதி.இரா.ரேவதி அவர்கள் அன்றைய தினமே (22.06.2022) தயார் நிலையினை பிரிவு அலுவலகத்தில் பதிவு செய்துள்ளதை தொடர்ந்து இதன் பொருட்டு petition no: 1506220642533 முடித்து வைக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 அதன் பின்னர் 06.07.2022 தேதியில் திருமதி.இரா.ரேவதி அவர்கள் தன்னுடைய நிலத்திற்கு இலவச மின் இணைப்பு தொடர்பான நடவடிக்கை ஆறு மாதத்திற்கு மேற்பட்டு நிலுவையில் உள்ளதால் மின் இணைப்பு வழங்க வேண்டி செயற்பொறியாளர் / நாமக்கல் அலுவலகத்திற்கு மனு செய்துள்ளதாகவும், இம்மனுவிற்கு தயார் நிலைப்பதிவு 22.06.2022 அன்று செய்துள்ளமைக்கு வரிசை கிரமம் அடிப்படையில் பணி மேற்கொள்ளப்பட்டு மின் இணைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டதாகவும், இந்நிலையில் 2022–2023 ஆம் ஆண்டிற்கான விவசாய மின் இணைப்பு வழங்கும் குறியீடு வரையறை செய்யப்பட்டு 31.03.2022–க்குள் தயார்நிலை பதிவு செய்துள்ள நபர்களுக்கு மட்டும் மின் இணைப்பு வழங்க உத்தரவு பெறப்பட்டதால், திருமதி.இரா.ரேவதி அவர்களின் 22.06.2022 தேதிய தயார் நிலைப்பதிவிற்க்கு வழங்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 மேலும் 02.11.2022 அன்று செயற்பொறியாளர்/இ&ப/நாமக்கல் அவர்களிடத்தில் கொடுத்த புகார்/கோரிக்கை கடிதத்தில் செயற்பொறியாளர்/நாமக்கல், அவர்களது 31.12.2021 தேதிய 30 நாள் அறிவிப்புக் கடிதத்தில் தயார்நிலை பதிவு செய்வதில் முரண்பாடு ஏதும் இருப்பின் விண்ணப்பத்தாரருக்கு பதிவு தபால் கடிதம் மூலம் தெரியப்படுத்த வேண்டும் என உள்ள நிலையில் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என தெரிவித்திருந்ததாகவும், பின்னர் 10.12.2022 தேதிய மனுவில் ID 10222057949–ன் படி விசாரணைக்கு அழைக்குமாறு திருமதி.ரேவதி

அவர்கள் கோரியிருந்ததாகவும், மேற்கண்ட புகார் குறித்து கள விசாரணை மேற்கொண்டு அதன் விரிவான அறிக்கையினை சமர்பிக்குமாறு உதவிசெயற்பொறியாளர்/ இ&ப/ வளையப்பட்டி அவர்கட்கு 25.11.2022 அன்று செயற்பொறியாளர் / இ&ப / நாமக்கல் அவர்களிடமிருந்து குறிப்பாணை வழங்கப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.7 பின்னர் 29.11.2022 தேதியில் திருமதி.இரா.ரேவதி அவர்கள் நாமக்கல் மின்நுகர்வோர் குறைதீரக்கும் மன்றத்தில் முறையீடு (ID.NO.2911221427199) செய்திருந்ததாகவும், அதில் ஜனவரி 2022–இல் அனைத்து ஆவணங்களும் அளிக்கப்பட்டும் ஜீன் மாதம் வரை நடவடிக்கை மேற்கொள்ளாமல் காலதாமதமாக பதிவு செய்து விட்டு இந்நாள் வரை மின் இணைப்பு வழங்கவில்லை எனவும் செயற்பொறியாளர் மற்றும் மேற்பார்வை பொறியாளர் ஆகியோரிடம் முறையிட்டதன் பேரில் மின்கம்பம் நட்டு வயர் இணைப்பு செய்து விட்டு மின் இணைப்பு வழங்காமல் காலம் தாழ்த்துவதாக தெரிவித்திருந்ததாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.8 மேலும் திருமதி.ரேவதி அவர்கள் 03.12.2022 தேதிய கடிதம் மூலம் தனக்கு மின் இணைப்பு வழங்கப்பட வில்லை என Director Distribution/Chennai, SE/RE&I(D)/Chennai மற்றும் CE/Karur ஆகியோருக்கு தெரிவித்திருந்ததாகவும், திருமதி.ரேவதி அவர்களின் 02.11.2022 தேதிய புகார் குறித்து களவிசாரணை செய்து 14.12.2022 அன்று உதவிசெயற்பொறியாளர்/இ&ப/வளையப்பட்டி அவர்கள் செயற்பொறியாளர் /இ&ப/நாமக்கல் அவர்களுக்கு அறிக்கை அனுப்பியிருந்ததாகவும், அதில் திருமதி.ரேவதி அவர்கள் தயார்நிலையினை பதிவு செய்திட ஜனவரி 2022 முதல் உதவி பொறியாளரை சந்தித்தது நிரூபணம் ஆவதாகவும் திருமதி.ரேவதி அவர்கள் ஜனவரி 2022–இல் வருவாய்துறை ஆவணங்களை (50 சென்ட்டுக்கும் குறைவான ஆவணங்கள்) பெற்றிருப்பது தெரியவருகிறது எனவும் இதனால் தயர்நிலை பதிவு செய்து கொள்வதில் முரண்பாடுகள் உள்ளதை செயற்பொறியாளர்/ நாமக்கல் அவர்களது 31.12.2021 தேதிய அறிவிப்புக் கடிதத்தில் கண்டுள்ளபடி விண்ணப்பத்தாரருக்கு பதிவு தபாலில் உதவி பொறியாளர் (பிரிவு அலுவலர்) தெரிவிக்கவில்லை எனவும், 50 சென்ட்டுக்கு உண்டான வருவாய் ஆவணங்களை

அளிக்குமாறு எந்தவொரு கடிதமும் விண்ணப்பத்தாரருக்கு வழங்கப்படவில்லை எனவும் அறிக்கையில் தெரிவித்துள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.9 13.06.2022 தேதியில் பொறுப்பு பிரிவு அலுவலர், திருமதி.ரேவதி அவர்கட்கு 50 சென்ட் நிலத்திற்கு வருவாய் ஆவணங்களை அளிக்குமாறு கடிதம் மூலம் தெரிவித்தவுடன் 14.06.2022 அன்று திருமதி.ரேவதி அவர்கள் 50 சென்ட்க்கும் அதிகமான நிலம் அவருக்கு உள்ளதற்கான வருவாய் ஆவணங்களை சமர்பித்ததை தொடர்ந்து தயார்நிலை பதிவு செய்திட கால அவகாச நீட்டிப்பு அனுமதியினை பெற்று 22.06.2022 அன்று தயார் நிலை பதிவு செய்யப்பட்டுள்ளது எனவும் அறிக்கை பெறப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.10 உதவிசெயற்பொறியாளரது கள விசாரணை அறிக்கை மற்றும் நாமக்கல் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் தீரப்பு நாள்.29.12.2022 ன் பேரில் திருமதி.ரேவதி அவர்கள் விவசாய மின் இணைப்பு பெற்றுக்கொள்ள அவரது தயார் நிலையினை பதிவு செய்வதில் தாமதம் ஏற்பட காரணமான உதவிபொறியாளர் /இ&ப/கிராமம்/மேற்கு/ நாமக்கல் அவர்கள் மீது துறைரீதியான குற்றச்சாட்டுகள் சுமத்தி ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.11 திருமதி.ரேவதி அவர்களின் தயார் நிலையினை பதிவு செய்ததில் தாமதம் ஏற்பட்டதன் விவரம் அறியப்பட்டும் திருமதி.ரேவதி அவர்களது 03.12.2022 மற்றும் 07.12.2022 தேதிய புகார் மனுவின் பேரிலும் தனக்கு விவசாய மின் இணைப்பு வழங்க வேண்டும் என தொடர்ந்து மனு/புகார் செய்து வந்ததன் பொருட்டு சிறப்பு இனமாக (Special case) மேற்கொண்டு திருமதி.ரேவதி அவர்கட்கு மின் இணைப்பு வழங்க உரிய அனுமதி கேட்டு மின்பகிர்மான கழக தலைமையகத்திற்கு நாமக்கல் மின் பகிர்மான கழக வட்டத்தின் மேற்பார்வைபொறியாளர் மூலமாக பரிந்துரை செய்து முன்மொழிவு 28.12.2022 அன்று அனுப்பப்பட்டு அதற்கு சில விவரங்களுடன் தலைமை பொறியாளரின் பரிந்துரையுடன் அனுப்புமாறு 05.01.2023 அன்று தலைமையகத்திலிருந்து கோரப்பட்டதாகவும், அதன் பேரில் 02.02.2023 நாளிட்ட கடிதம் மூலம் விவரங்களை பரிந்துரையுடன் தலைமைபொறியாளர் / கரூர் மூலமாக

அனுப்பப்பட்டதாகவும், அதன் பின் மேற்கொண்டு கூடுதலாக சில விவரங்கள் கோரி 23.02.2023 அன்று கடிதம் பெறப்பட்டு அதற்கு 28.02.2023 தேதிய கடிதம் மூலம் மேற்பார்வைபொறியாளர்/நாமக்கல் மூலமாக தலைமையகத்திற்க்கு அனுப்ப விவரங்கள் சமர்பிக்கப்பட்டுள்ளது என்பதனையும் அனுமதி கிடைக்கப்பெற்றவுடன் திருமதி இரா.ரேவதி அவர்கட்கு மின் இணைப்பு வழங்கப்பட உள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

## 7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் 2011 ஆம் ஆண்டு விவசாய மின் இணைப்பு வேண்டி 12.11.2011 அன்று பதிவு எண் 259/11–12 அன்று செயற்பொறியாளர் அலுவலகத்தில் திருமதி இரா . ரேவதி அவர்களின் பெயரில் பதிவு செய்துள்ளார் . அவ்வாறு பதிவு செய்யப்பட்ட விண்ணப்பத்திற்கு 30.11.2021 அன்று அறிவிப்பு கடிதம் பெறப்பட்டது . அதன் அடிப்படையில் ஜனவரி 2022 அன்றே அரை ஏக்கருக்கு மேல் நிலம் இருப்பதை தெரியப்படுத்தியதை பின்பும் பிரிவு அதிகாரிகள் கள ஆய்வு செய்யாமல் காலம் கடந்து ஜூன் மாதத்தில் அரை ஏக்கர் நிலம் இல்லை என்று கூறி மீண்டும் ஆவணங்களின் அடிப்படையிலேயே காலதாமதமாக தயார் நிலையை 22.06.2022 அன்று பதிவு செய்யப்பட்டது என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.3 மேற்கண்ட காலதாமதத்தினால் தன்னுடைய தயார் நிலையை ஜனவரி 2022 மாதமே பதிவு செய்திருந்தால் இலவச விவசாய மின் இணைப்புக்கான முன்னுரிமை காலகெடுவான 31.3.2022 வரை வழங்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் தனக்கு இலவச விவசாய மின் இணைப்பு கிடைத்திருக்கும் என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். எனவே, மின் இணைப்பை ஜனவரி 2022 தயார்நிலை பதிவு செய்ய கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் மின் இணைப்பை வழங்கவும் மேலும் இழப்பீடு வழங்கவும் முறையீடு செய்துள்ளார்.

7.4 எதிர்மனுதாரர் செயற்பொறியாளர்/இ&ப/நாமக்கல் தயார் நிலை பதிவு செய்யப்பட்டதில் ஏற்பட்ட கால தாமதத்தை விசாரிக்க 25.11.2022 அன்று உதவி

செயற்பொறியாளர்/இப/வளையப்பட்டி அவர்களுக்கு ஆணை வழங்கப்பட்டதாக தெரிவித்தார். மேலும் உதவி செயற்பொறியாளர் /இப/வளையப்பட்டி 14.12.2022 அன்று தனது ஆய்வறிக்கையை சமர்ப்பித்ததாகவும் தெரிவித்தார் . எனவே அந்த ஆய்வறிக்கையை நான் ஆராய விரும்புகிறேன் . அந்த ஆய்வறிக்கையின் சில முக்கிய பகுதிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

*"மேற்கண்ட திருமதி.இரா.ரேவதி க/பெ. செல்வராஜ் பெரியப்பட்டி நாமக்கல் அவர்களின் விவசாய விண்ணப்பம் சம்பந்தமாக வணிக ஆய்வாளர் மற்றும் வணிக உதவியாளர் அவர்களிடம் விசாரனை மேற்கொண்டதில் விவசாய விண்ணப்பம் தொடர்பாக ஜனவரி 2022 முதல் உதவிபொறியாளர் இயக்கமும் பராமரிப்பும் கிராமம் மேற்கு நாமக்கல் பிரிவு அவர்களை திருமதி.இரா.ரேவதி க/பெ. செல்வராஜ் பெரியப்பட்டி நாமக்கல் அவர்கள் கிராமம் மேற்கு நாமக்கல் பிரிவு அலுவலகத்தில் சந்தித்தது விசாரணையில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் ஆகிறது.*

*மேலும் திருமதி.இரா.ரேவதி க/பெ. செல்வராஜ் பெரியப்பட்டி நாமக்கல் அவர்களின் விவசாய விண்ணப்பம் கோப்புகளை ஆய்வு செய்தபோது புதிய வருவாய் ஆவணங்கள் அனைத்தும் ஜனவரி 2022 ல் (50 செண்ட்க்கும் குறைவான ஆவணங்களை) அவர்கள் பெற்றிருப்பது தெரியவருகிறது.*

*மேலும் உதவிபொறியாளர் இயக்கமும் பராமரிப்பும் கிராமம் மேற்கு நாமக்கல் பிரிவு அலுவலர் அவர்கள் செயற்பொறியாளர் இயக்கமும் பராமரிப்பும் நாமக்கல் அவர்கள் அளித்துள்ள 30 நாட்கள் தயார்நிலை அறிவிப்பு கடிதத்தில் (நாள்:31.12.2021) தயார்நிலை பதிவு செய்வதில் முரண்பாடுகள் ஏதும் இருப்பின் விண்ணப்பதாரருக்கு பதிவு தபாலில் கடிதம் மூலம் விவரங்களை தெரிவிக்கவேண்டும் என கூறியிருந்தும் உதவிபொறியாளர் இயக்கமும் பராமரிப்பும் கிராமம் மேற்கு நாமக்கல் அவர்கள் 50 சென்டிற்கும் உண்டான வருவாய் ஆவணங்களை அளிக்குமாறு எந்தவொரு கடிதமும் விண்ணப்பதாரருக்கு வழங்கப்பட வில்லை என்பது ஆய்வில் தெரியவருகிறது."*

7.5 மேலும் உதவி செயற்பொறியாளர் /இப/வளையப்பட்டி தன்னுடைய விசாரணை அறிக்கையில் திருமதி ரேவதி , வணிக உதவியாளர் அவருடைய அறிக்கையில் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

*"திருமதி இரா .ரேவதி, க/பெ. செல்வராஜ் அவர்கள் பெரியப்பட்டி கிராமத்தில் விவசாயமின் இணைப்பு வேண்டி விண்ணப்பித்த விண்ணப்பம் தொடர்பாக*

*திருமதி. இரா.தேவதி அவர்கள் கடந்த ஜனவரி மாதம் 2022 முதல் தொடர்ந்து உதவி பொறியாளர் இயக்கமும் பராமரிப்பும் கிராமம் மேற்கு நாமக்கல் அவர்களை சந்தித்து வந்தார் என்பதை தங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்."*

7.6 மேற்கண்ட அறிக்கைகளின் அடிப்படையிலேயே மின்நுகர்வோர் குறைதீர்மன்றம் தனது ஆணையின் கண்டுபிடிப்பில் அந்த விசாரணை அறிக்கையின் கண்டுபிடிப்புகளை ஒத்துக் கொண்டுள்ளது . அவ்வாறு ஒத்துக் கொண்டுள்ள ஆணை கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

*"திருமதி ரேவதி, க/பெ செல்வராஜ் அவர்கள் விவசாய மின் இணைப்பு பெற தயார் நிலை பதிவு செய்ய காலதாமதம் ஏற்பட்டதற்கு பிரிவு அலுவலரே காரணம் என்பதும் விசாரணையின் அடிப்படையில் தெரிய வந்துள்ளது."*

7.7 இந்நிலையில் உதவி பொறியாளர் /இ.பா./கிராமம்/மேற்கு/நாமக்கல் மேல்முறையீட்டாளருக்கு அனுப்பிய கடித எண் உ .பொ/இ.ப/கி.மே/நா/கோ.விவசாயம்/அ.எண்.056/2022 நாள் 13.06.2022 தேதியிட்ட கடிதத்தின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"தங்கள் தயார் நிலை பதிவு செய்வதற்கு அளிக்கப்பட்ட விண்ணப்பம் ஆய்வு செய்த போது தங்களின் கிணறு கூட்டாக பா த்தியப்பட்ட நிலத்தில் 50 சென்டிற்கு குறைவாக உள்ளது . ஆனால் மின்வாரிய விதிமுறைப்படி மின் இணைப்பு வழங்குவதற்கு 1 நபர்க்கு குறைந்தபட்சம் 50 சென்ட் இருக்க வேண்டும். எனவே சர்வே எண் 374/4–க்கு உள்ள கிணற்றில் இருந்து தொடர்ச்சியாக இதர நிலங்கள் விவசாய பாசனத்திற்க்காக இருப்பின் அதற்கான கம்ப்யூட்டர் சிட்டா மற்றும் FMB வழங்குமாறு தெரிவித்துக் கொள்கிறேன்"*

7.8 இதன் அடிப்படையிலேயே மேல்முறையீட்டாளர் 14.06.2022 அன்று 2.5 ஏக்கர் நிலம் பாசனத்திற்குரியது எனவும் , அதற்கான ஆவணங்களை இணைத்துள்ளது தெரிய வருகிறது . மேலும், 22.6.2022 அன்று திருமதி ரேவதி அவர்களுக்கு கா ல நீட்டிப்பு வழங்கி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது . மேற்கூறிய ஆவணங்களை ஆய்வு செய்வதில் மேல்முறையீட்டாளர் தயார் நிலை அறிவிப்பு கடிதம் ஜனவரி 2022–இல் உதவி செயற்பொறியாளர்/இ.பா/கிராமம் அவர்களிடம் கொடுத்த பின்பும் அதில் எந்தவிதமான முரண்பாடு எழுத் து பூர்வமாக கோரப்ப டவில்லை என்று தெரிகிறது . உதவி பொறியாளர் /இ.பா/கிராமம்/மேற்கு/நாமக்கல் அவர்களின் இச்செயல் மிகவும்

தவறான நடவடிக்கையாகவே கருதப்படுகிறது . மேலும், இச்செயலுக்கு காரணமான உரிய அலுவலர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க செயற்பொறியாளர் /இ.பா/ நாமக்கல் அறிவுறுத்தியது தெரியவருகிறது.

7.9 மின்குறைதீர்ப்பாளர், பணியாளர் மீது நடவடிக்கை எடுக்க ஆணை வழங்க அதிகாரம் இல்லை என்றாலும் மேல்முறையீட்டாளரின் முக்கிய கோரிக்கையான தனது தயார் நிலை கடிதத்தின் அடிப்படையில் ஜனவரி 2022–இல் பதிவு செய்திருந்தால் தனக்கு இலவச விவசாய மின் இணைப்பு முன்னுரிமை 31.03.2022–இல் கிடைக்கப்பெற்றிருக்கும் என்ற வாதம் மின்குறைதீர்ப்பாளருக்கு சரி என்றேபடுகிறது. எனவே, எதிர்மனுதாரர் மேல்முறையீட்டாளருக்கு 30 நாட்களுக்குள் மின் இணைப்பு பெற உரிய அறிக்கை அனுப்பி விவசாய மின் இணைப்பு வழங்க உத்தரவிடப்படுகிறது.

7.10 மேலும், மேல்முறையீட்டாளர் தனக்கு விவசாய மின் இணைப்பு வழங்கும்பட்சத்தில் இழப்பீடு வழங்கு ம் கோரிக்கையை கைவிடுவதாக கூறியத ன் அடிப்படையில் மேல்முறையீட்டாளரின் கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டு எந்தவித இழப்பீட்டுக்கும் நடவடிக்கை எடுக்க பரிந்துரைக்கப்படவில்லை.

8.0 <u>முடிவுரை</u>:

8.1 எதிர்மனுதாரரின் அலுவலத்தின் கீழ் செயல்படும் பி ரிவு அலுவலகத்தில் உரிய காலத்தில் மேல்முறையீட்டாளரின் தயார் நிலை பதிவு செய்ய ஆவணங்களை அளித்த பின்பும் அது காலம் கடந்து பதிவு செய்ய நடவடிக்கையில் ஈடுபட்டதால் மேல்முறையீட்டாளரின் இலவச விவசாய மின் இணைப்பு பெறுவதில் முன்னுரிமை பாதிக்கப்பட்டது உறுதியாவதால் மேல்முறையீட்டாளருக்கு 30 நாட்களுக்குள் மின் இணைப்பு பெறுவதற்கான உரிய அறிக்கை வழங்கி அதன் அடிப்படையில் இலவச விவசாய மின் இணைப்பு வழங்குமாறு உத்தரவிடப்படுகிறது.

8.2 மேற்கண்ட ஆணை யை 30 நாட்களுக்குள் நிறைவேற்றியமைக்கான அறிக்கையை இந்த ஆணை கிடைக்கப்பெற்ற 45 நாட்களுக்குள் எதிர்மனுதாரர் மின்குறைதீர்ப்பாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்று உத்திரவிடப்படுகிறது.

8.3 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் 12/2023 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
மின்குறைதீர்ப்பாளர்

"நுகர்வோர் இல்லையேல் நிறுவனம் இல்லை"
**"No Consumer, No Utility"**

பெறுநர்

1. திருமதி இரா. ரேவதி,
4/150, தெற்கு தெரு, பெரியப்பட்டி,
நாமக்கல் – 637 002.

2. மேற்பார்வை பொறியாளர்,
நாமக்கல் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
ஜெய் சூர்யா டிபார்ட்மெண்டல் ஸ்டோர்ஸ் எதிரில்,
திருச்செங்கோடு ரோடு, நாமக்கல் – 637 001.

3. செயற்பொறியாளர்/இ&ப/ நாமக்கல்,
நாமக்கல் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
38/A, கோ–ஆப்ரேட்டிவ் காலனி,
நாமக்கல் – 637 001.

4. உதவி மின்பொறியாளர்/இ&ப/கிராமபுறம்/மேற்கு/நாமக்கல்,
நாமக்கல் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
6வது வார்டு, D.No. 751, 110 KVSS வளாகம்,
நாமக்கல் – 637 001.

5. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

6. செயலாளர், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், – By email
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

7. உதவி இயக்குநர் (கணினி) – தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.